## 4. கவன ஈர்ப்பு.

### (அ) சேலம் மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்து பால் கொள்முதல் விலை கிடைக்கப் பெறாதது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பால் பெருக்குத் திட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பல கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், உறுப்பினர்களிடமிருந்து சேகரித்த பாலை ஒன்றியங்களுக்கு வினியோகம் செய்கின்றன. ஒன்றியங்கள், சீரமைக்கப்பட்ட பால் சேகரிப்பு வழித்தடங்களின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பாலை சேகரிக்கின்றன. காலையிலும், மாலையிலும் இவ்வாறு பால் சேகரிப்பப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் பால் அருகிலுள்ள குளிர் பதனிடும் நிலையத்திற்கோ அல்லது பால் பண்ணைக்கோ வசதியைப் பொறுத்து அனுப்பப்படுகிறது. குளிர் பதனிடும் நிலையத்தில் பெறப்பட்ட பாலின் தரமும், அளவும் சரி பார்க்கப்படுகிறது. இதன் அடிப்படையில் பாலின் விலை நிர்ணயிக்கப்பட்டு பத்து நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட ஒன்றியங்கள்மூலம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச், சங்கங்கள், ஒன்றியங்களிலிருந்து பெற்ற பாலின்விலையை உறுப்பினர்களுக்கு பட்டுவாடா செய்கின்றன

பால் உற்பத்தி, உபரி காலத்திலும், வறட்சி காலத்திலும் பெருமளவு வேறுபடும். உபரி காலத்தில் சேகரிக்கப்படும் பால், வறட்சி காலத்தில் சேகரிக்கப்படும் பாலினை விட இரு மடங்காகும். எனவே, உபரி காலத்தில் சேகரிக்கப்பட்ட மொத்த பாலையும் நிலைப்படுத்திய பாலாக உபயோகப்படுத்த முடியாது. உபரி காலத்தில் உற்பத்தியான அதிகமான பாலை, பால் உபபொருட்களாக, அதாவது பால் பவுடர், வெண்ணை, நெய் ஆகியவைகளாக மாற்றம் செய்யப்படுகின்றது. அதிகப்படியாக பெறப்படும் பால், உபரி மாதங்களில் பால் உபபொருட்களுக்கு தேவை மிகவும் குறைகின்றது. அதே நேரத்தில் உபபொருட்களுக்கு, விற்பனையில் கிடைக்கும் விலையோ குறைவு. இக்காலங்களில் உபபொருட்களை விற்று, பொருளாதார ரீதியாக நியாயமான விலை பெறுவது என்பது சாத்திய

மில்லை. எனவே, மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை, உபபொருட்களை கிடங்குகளில் சேமித்து வைக்க வேண்டியுள்ளது. இதனால் பணமுடக்கமும், கூடுதல் செலவும் ஆகின்றது. உபரி காலங்களில் பொதுவாக பாலுக்குண்டான பணத்தை சிறிது தாமதத்துடன் பட்டுவாடா செய்யும் நிலை ஏற்படுகின்றது. அதிகப்படியான வட்டி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினால், நடப்பு மூலதனம் எப்போதுமே தயார் நிலையில் வைக்க இயலுவதில்லை. இருப்பினும், பாலுக்கு தரப்படும் பணம் விவசாயிகளுக்கு கிடைக்கத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது. வேறு உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட பணமும், விவசாயிகளின் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது.

சேலம் ஒன்றியத்தில் 31-1-84 முடிய பெறப்பட்ட பாலுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டாகிவிட்டது. சேலம் ஒன்றியத்திற்கு முன்பணம் தருவதன் மூலம் பாலுக்குண்டான பாக்கி மீதி பணத்தை அடைக்க வேண்டி, தமிழ் நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் முடிய பால் உற்பத்தியாளர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்துவிட்டதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் பிப்ரவரி, மார்ச் ஆகிய இரண்டு மாதங்களுக்கு இன்னும் அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இப்படி ஒரு மாத காலம், ஒன்றரை மாதம் கழித்து பணத்தை அவர்களுக்குப் பட்டுவாடா செய்வது அவர்களுக்கு மிகுந்த சிரமத்தையும், சங்கடத்தையும் ஏற்படுத்தும் வகையில் இருக்கிறது. காரணம் இந்த வருமானத்தைக் கொண்டுதான் அவர்கள் மாடுகளுக்குத் தீவனம் வாங்குவது மற்றும் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவது என்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பல காரியங்களுக்கு அவர்களுக்குப் பணம் தேவைப்படுகின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜனவரி மாதத்திற்கான பணத்தை இவ்வளவு துரிதமாக ஃபெடரேஷன் மூலமாக ஒன்றியத்திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பது போல் பிப்ரவரி, மார்ச் ஆகிய இரண்டு மாத காலத்திற்கான அந்தப் பணத்தையும் விரைவாக அனுப்பி வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க உடனடியாக அவர்களுக்குரிய பணத்தைக் கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, உபரி காலத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற பால் பவுடர், வெண்ணை, நெய் போன்ற பாலின் உப பொருட்களைக் கிடங்குகளில் சேமிக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அந்த உபரி காலத்திலே இப்படி பணம் பட்டுவாடா செய்வதில் கால தாமதம் ஏற்படுகின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு யூனியன் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற உபபொருட்களைப் ஃபெடரேஷன் மூலம்தான் விற்பனை செய்வது என்று ஒரு பழக்கத்தை நடை முறையில் கையாண்டு வருகிறோம். ஆகவே இந்தச் சுமையை உற்பத்தியாளர்களுக்கோ அல்லது ஒன்றியங்களுக்கோ சுமத்தாமல் இந்த மாதிரி சங்கடமான நிலைமைகளில் ஃபெடரேஷனே அந்தச் சங்கடத்தை ஏற்றுக் கொண்டு ஃபெடரேஷனே முன் பணத்தை யூனியனுக்குக் கொடுத்து உற்பத்தியாளர்களுக்குச் சங்கடம் இல்லாத சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முயற்சி மேற் கொள்ளுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இணையமே முன் பணம் கொடுக்க முடிவெடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (ஆ) மையக் மதிப்பீட்டு முறை சென்னை பலகலைக் கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் மு. அப்பாதுரை, எம். ஆறுமுகம், தி. கா. நல்லப்பன், என். ஏ. பூங்காவனம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்

திரு. மு அப்பாதுரை : தலைவர் அவர்களே, ''சென்னைப் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு தேர்வுகளில் ''மைய மதிப்பீட்டு முறை'' யினால் ஏற்பட்டுள்ள குறைபாடுகளால் மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.